பக்கங்கள்:-எட்டு

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00





# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி 20 | செவ்வாய்க்கிழமை | (07.10.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 292


## கடற் புலிகளினால் அரசுக்கு அச்சம்

# இஸ்ரேலின் 15 பீரங்கிப் படகுகள் இலங்கை அரசால் கொள்வனவு

(நமது நிருபர்)

**விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு அரசு ஆர்வம் கொண்டுள்ளதாக காட்டிக்கொள்ளும் அதேவேளை மீண்டும் ஒரு யுத்தத்திற்கு தன்னைத் தயார்படுத்தும் நோக்குடன் இஸ்ரேலிடம் இருந்து 15 அதி நவீன பீரங்கிப் படகுகளை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தில் அரசு கைச்சாத்திட்டுள்ளது.**

இலங்கைக் கடற்பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் படையணிக்கு ஈடுகொடுக்கவல்லதாக இலங்கை கடற்படையை நவீன மயப்படுத்தி பலப்படுத்த வேண்டுமென கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் தயாசந்தகிரி அரசுக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்து அரசு இஸ்ரேலிடம் இருந்து இப் பீரங்கிப் படகுகளை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தில் கடந்த வாரம் கைச்சாத்திட்டுள்ளது.

கடற் புலிகளின் பீரங்கிப் படைப்பலத்திற்கு இணையாக இலங்கை கடற்படையின் பலத்தை அதிகரிக்க வேண்டுமென்ற கருத்து அண்மைக்காலமாக அரசுக்கு ஆலோசனை வழங்குபவர்களால் கூறப்பட்டு வந்துள்ளது.

அரசு கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ள பீரங்கிப் படகுகளுக்கு பொருத்துவதற்கான 30மில்லி மீற்றர் ரகப் பீரங்கிகளை அமெரிக்காவிடம் இருந்தா அல்லது இஸ்ரேலிடம் இருந்தா கொள்வனவு செய்வதென்ற சர்ச்சை அரசுக்குள் இருந்த போதும் இஸ்ரேலிடம் இருந்தே கொள்வனவு செய்ய வேண்டுமென கடற்படை உயர் அதிகாரிகளும் சில அமைச்சர்களும் அரசை வற்புறுத்தி வந்தமையால் இஸ்ரேலிடம் இருந்தே பீரங்கிகளைக் கொள்வனவு செய்வதென அரசு முடிவு செய்து கடந்த வாரம் அதற்கான ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டுள்ளது.

இஸ்ரேலிடம் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ள 15 பீரங்கிப் படகுகளும் கடற்படையில் இணைக்கப்பட்டபின் தற்போதுள்ள பீரங்கிப் படகுகள் அகற்றப்படும்

(8ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க ஏவுகணைக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில்

(கொழும்பு)

ஏவுகணைத் தாக்குதல் நடத்தக் கூடிய அமெரிக்க கடற்படைக் கப்பல் ஒன்று நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

1987ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட அக் கப்பலில் 230 மாலுமிகள் கடமையாற்றுகிறார்கள். எரிபொருள் நிரப்புவதற்காகவே இக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

கடற்படைக் கப்பலின் இந்த விஜயத்தினால் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் மேலும் பலப்படக் கூடியதாக இருக்கும் என்று அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார். (வ)

## மீனவர்களின் 30 வீடுகள் மன்னாரில் எரிந்து நாசம்

(மன்னார்)

மன்னார் வங்காலைப் பகுதியில் நேற்று பிற்பகல் திடீரென ஏற்பட்ட தீவிபத்தினால் 30க்கும் மேற்பட்ட மீனவர்களின் வீடுகள் எரிந்து சாம்பலாகியுள்ளன.

நேற்றுப் பிற்பகல் ஏற்பட்ட இத் தீவிபத்தினால் மீனவர்களின் குடிசைகளில் இருந்த பெறுமதி வாய்ந்த மீன்பிடி உபகரணங்களும் எரிந்துள்ளன.

இத் தீவிபத்துத் தொடர்பாக மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## மன்னாரில் பொங்கு தமிழ் நகர்ப் பகுதி எழுச்சிக் கோலம்

(மன்னார்)

மன்னாரில் எதிர்வரும் 15ம் திகதி நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுக்காக பொங்கு தமிழ்ப்பானை நேற்று வவுனியாவில் இருந்து மன்னாருக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)





அயர்லாந்துப் பேச்சுக்கள் நேற்று ஆரம்பமான போது விடுதலைப் புலிப்பிரமுகர்களும் சர்வதேச சட்ட நிபுணர்களும் கலந்து கொள்ளும் காட்சி

# இராணுவத்தில் இருந்து இதுவரை 49ஆயிரம் பேர் தப்பியோடி உள்ளனர்

### பேராதனைப் பல்கலைக் கழக ஆய்வு தரும் தகவல்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திலிருந்து 49ஆயிரத்து 143 இராணுவத்தினர் தப்பியோடி விட்டதாக பேராதனைப் பல்கலைக் கழக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

தப்பியோடிய 49ஆயிரத்து 143 இராணுவத்தினரும் இராணுவத்தின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு என்றும் அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தப்பியோடிய இந்த இராணுவத்தில் 623 பேர் படைஅதிகாரிகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திற்கான போதிய பயிற்சியின்மை, பாதாள உலகக் கோஷ்டியின் அச்சம், சரியான வழிகாட்டலின்மை, போருக்கான அச்ச உணர்வுகளே இவர்கள் தப்பியோடக் காரணங்களாக அமைந்துள்ளன என்றும், 1995ம் ஆண்டு விடுதலைப் புலிகள் வன்னி சென்றதையடுத்து இத் தொகை அதிகரித்துள்ளதாகவும் அந்த ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## சமாதான முயற்சி வெற்றிபெற படையினர் ஆதரவு வழங்குவர்

### கிழக்கு மாகாண இராணுவத் தளபதி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

சமாதான முயற்சி வெற்றி பெற படைத்தரப்பினர் பூரண ஒத்துழைப்பு வழங்குவர் என கிழக்கு மாகாணத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன மங்கள ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில், இராணுவத் தளபதி மேலும் தெரிவிக்கையில்,

படைத்தரப்பினர் மற்றும் விடுதலைப் புலிகளுக்கிடையிலான தகராறுகள் பல உயர் மட்ட அதிகாரிகளுக்குத் தெரியவராத நிலையில் கீழ் மட்ட உறுப்பினர்

(8ம் பக்கம் பார்க்க)

## கொட்டகைகள் விஷமிகளால் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வைமன் வீதியில் உள்ள எடிசன் கல்வி நிறுவனத்தின் கொட்டகைகள் நேற்று இரவு 7.30 மணியளவில் விஷமிகளால் எரிக்கப்பட்டுள்ளது.

இத் தீவிபத்துக் குறித்து தீயணைப்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் கொண்டு சென்ற தீயணைக்கும் கருவிகள் உடனடியாக செயற்படாததனால் கொட்டகைகள் முற்றாக எரிந்து நாசமாகின. (ந-5)

## அரசதுறை ஊழியர்கள் இன்று பிக்கற்றிங் செய்வர்

(கொழும்பு)

அரசதுறை தொழிற் சங்கங்கள் இன்று பிக்கற்றிங் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

தற்போது அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டுமெனவும், தொழிலாளர்களின் சட்ட திட்டங்களை மீறியதற்காகவும் தேசிய வளங்களை தனியார் மயப்படுத்துவது மற்றும் விற்பனை செய்வது என்பன நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோரியே இப் போராட்டம் நடத்தப்படுகிறது. தத்தமது வேலைத் தளங்கள் முன்பாக மதியவேளையில் அரச ஊழியர் அனைவரும் பிக்கற்றிங் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என அகில இலங்கை தொழிற்சங்க அமைப்பின் பொதுச் செயலாளர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

இதேவேளை ஜே.வி.பி, ஶ்ரீ.ல.சு.கட்சி, புதிய இடதுசாரி

(8ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு உண்டு

**தரமான ஓடுகள், சீற்வகை**

**(யானைமார்க்)**

எமது வலி கிழக்கு வட பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் தரமான ஓடுகள், கூரை சீற், தட்டை சீற் (யானைமார்க்) ஆகியன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொகையாக பெறுபவர்கட்கு வாகன வசதி செய்து கொடுக்கப்படும். (C/6730)


## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க விஷேட பொதுக் கூட்டம் எதிர் வரும் 10ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.4.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-08)


## 253குடும்பங்கள் பரிதவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இயங்கிவரும் 5இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களிலுள்ள 253 குடும்பங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன எனத் தெரியவருகின்றது.

இங்கு குடிநீர், சுகாதாரப் பிரச்சினைகளும், வீடுகளின் இட நெருக்கடி போன்றவையும் முதன்மை பெற்றுள்ளதால், இங்கு வாழும் மக்கள் குறிப்பாக சிறுவர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். (தி-16)

## ஜே.வி.பிக்கு கிடைத்த போர்த் தேங்காய்




# கோபி அனானின் விஜயம் மீண்டும் பிற்போடப்பட்டது

(கொழும்பு)

ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் தனது இலங்கை விஜயத்தை மீண்டும் ஒருமுறை பிற்போட்டுள்ளார். ஈராக் நிலைமைபற்றிய புதிய தீர்மானங்கள் எடுப்பது தொடர்பான விவகாரங்களில் அவர் கலந்துகொள்ள வேண்டியிருப்பதாலேயே இலங்கைககான அவரின் விஜயம் பிற்போடப்பட்டிருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.நா.செயலாளர் நாயகம் தனது விஜயத்தை பிற்போட்டுள்ளமை தொடர்பாக ஐ.நா.விற்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி சார்லி மகேந்திரன் பிரதமர் ரணிலுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் இடம்பெற இருந்த இவ்விஜயம். அமெரிக்காவின் ஈராக் மீதான தாக்குதல் நடாத்தப்படவிருந்த சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டிருந்தது. பின்னர் எதிர்வரும் 10ஆம் திகதி இடம்பெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது இரணடாவது தடவையாகவும் இவ் விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.(தி-06)

# இந்தியா–நியூசிலாந்துக்கிடையிலான டெஸ்ட்போட்டி அடுத்தவாரம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிற்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி அடுத்தவாரம் அகமதாபாத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. இந்த டெஸ்ட் போட்டிகளுக்காக விளையாடும் இந்திய அணி வீரர்களில் யுவராஜ் சிங்கும் வி.வி.எக்ஸ்.லஷ்மன் ஆகியோர் இடம் பெற்றிருக்கின்றனர்.

21வயதுடைய யுவராஜ் சிங் ஒருநாள் சார்வதேச போட்டிகளில் இந்திய அணி மத்திய நிலைத் துடுப்பாட்ட வீரராக இடம் பெற்று வருபவர் இவர். நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியின் மூலம் இந்திய டெஸ்ட் அணியில் முதல் முதலாக இடம்பெறவுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் நீண்ட நாட்களாக இந்திய டெஸ்ட் அணியில் இடம் பெறாமல இருந்த வி.வி.எக்ஸ்.லஷ்மனும் இடம்பெற்றிருக்கிறார்.

இந்திய தெரிவுக்குழு இந்தியாவின் டெஸ்ட் அணி வீரர்களின் பட்டியலை நேற்று முன்தினம் அறிவித்திருந்தது. இதன்படி நியூசிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் இந்திய அணியில் சௌரோவ் கங்குலி அணித் தலைவராகச் செயல்படும் வகையில் வீரேந்தர் சேவாக், அகாஷ் சோப்ரா, ராகுல் ராவீத், சச்சின் டெண்டுல்கர் வி.வி. எக்ஸ். லஷ்மன், பார்த்தீப் பட்டேல், கர்பஜன் சிங், அனில் கும்ளே, ஷகீர்கான், பாலாஜீ, ஆவிஸ்கர் சல்வீர், சராஜீ, யுவராஜ்சிங் ஆகியோர் இடம் பெற்றிருக்கின்றனர்.(தி-68)

# அங்கவீனமுற்ற இராணுவத்தினருக்கு அரைவிலையில் முச்சக்கரவண்டி

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கு அரை விலையில் முச்சக்கர வண்டிகளை வழங்கும் திட்டமொன்றை வலதுகுறைந்த வீரர்களின் நலன்புரிச்சங்கம் ஆரம்பித்துள்ளது.

தனியார் துறை நிதிநிறுவனங்கள் இத்திட்டத்திற்கு உதவ முன் வந்துள்ளன. யுத்த காலத்தில் போரில் மரணமடைந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கும், போரினால் காயமடைந்து அங்கவீனா களாய் உள்ளவர்களுக்குமே இவ் வுதவி கிடைக்கும் என சங்கத்தின தலைவர்' அசோக்க தயாரத்ன தெரிவித்துள்ளார்.

(தி-60,10)

# இந்தியா–நியூசிலாந்து 3 நாள் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவு

(யாழ்ப்பாணம்)

நியூசிலாந்து அணிக்கும், இந்திய A அணிக்கும் இடையில் ராஜ் போட்டியில் நடைபெற்ற மூன்று நாள் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி அதன் முதல் இன்னிங்சில் 7விக்கெற்றுக்களை இழந்து 375 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் நியூசிலாந்து அணிசார்பாகத் துடுப்பெடுத்தாடிய றிச்சேட்சன் 128 ஓட்டங்களையும், ஓரம் ஆட்டமிழககாமல் 101 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இந்திய 'A' அணி தனது முதல் இன்னிங்சில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 403 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் கேமன்படானி 127 ஓட்டங்களையும் சடேகோபன் ரமேஷ் 110 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

நியூசிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்சில் 4விக்கெற்றுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை மூன்றாம் நாள் ஆட்டம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.

இதேவேளை, இந்திய கிரிக்கெற் அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட போட்டி அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ளது. (தி-68)

# சங்கானைக் கல்விக் கோட்ட பாவோதல் போட்டி முடிவுகள்

(கந்தரோடை)

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட சகலகலாவல்லிமாலை பாஓதல் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் விபரம் வருமாறு:-

### ஆண்கள்

**பிரிவு I**

முதலாம் இடம்:ரி.பிறேமானந்தா-யா/வட்டு இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம்:அ.ஆவணன்-யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

மூன்றாம் இடம்:ப.கஜந்தன்-யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூாி.

**பிரிவு II**

முதலாம் இடம்:அ.திவ்வியராஜ்-யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

இரண்டாம் இடம்:செ.ஜீவராஜ்-யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

மூன்றாம் இடம்:த.பிரதீபன்-யா/வட்டு மத்தியகல்லூரி.

### பெண்கள்

**பிரிவு I**

முதலாம் இடம்:க.தாரணி-யா/அராலி சரஸ்வதி வித்தியாலயம்.

இரண்டாம் இடம்:ந.தாரணி-யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

மூன்றாம் இடம்:ச.கேதாரா-யா/வட்டு இந்துக்கல்லூரி.

**பிரிவு II**

முதலாம் இடம்:ர.யாழினி-யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.


இரண்டாம் இடம்:ர.நிலாணி-யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

மூன்றாம் இடம்-க.ஐஸ்வரியா-யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

(தி-103)

# விளையாட்டுச் செய்திகள்





## உதைபந்தாட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லக் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்திவந்த உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப்போட்டிதவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## மரதனோட்டம்

(சுண்டுக்குளி)

பாசையூர் சென் அன்ரனீஸ் இளைஞர் விளையாட்டுக் கழகம் அதன் 20வது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது.

அந்த வகையில் கடந்த மூன்றாம் திகதி இடம்பெற்ற 10கிலோ மீற்றர் மரதனோட்டப் போட்டியில் முதல் 5 இடங்களையும் முறையே எ.ஜதீஸ்லாஸ், எஸ்.சியோன், எ.எல்ரன், ரி.துரை, எஸ்.ஆனந்தன் ஆகியோர் பெற்றுள்ளனர்.(உ-110)

# அளவெட்டி அருணோதய சிறப்பான வெற்றி

(அளவெட்டி)

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையில் அண்மையில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி சிறப்பான வெற்றியைப் பெற்று வலய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மேற்படி உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 14வயதுப் பிரிவில், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை எதிர்த்து விளையாடிய அளவெட்டி அருணோதயக் கல்லூரி 1:0என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

அத்துடன், 16 வயதுப் பிரிவில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தை எதிர்த்து விளையாடிய அளவெட்டி அருணோதயக் கல்லூரி 7:1 என்ற கோல்கணக்கிலவெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இதேவேளை, 18வயதுப் பிரிவில், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன கல்லூரி ஆகியன விறுவிறுப்பாக ஒன்றையொன்று எதிர்த்து விளையாடிய போதும், இரு அணிகளும் குறிபபிட் நேரத்திற்குள் எந்தவொரு கோலையும் பெற்றுக்கொள்ளவில்லை. இதனால் பனால்ட்டியில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் வெற்றியைப் பெற்றுக்கொண்டது. (உ-83)

# வன்னிப் பகுதியில் ஸ்பானிய செஞ்சிலுவைச் சங்கம் விவசாய உள்ளீடுகள் விநியோகம்

(திருநெல்வேலி)

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள வன்னிப் பகுதி விவசாயிகளுக்கு ஸ்பானிய செஞ்சிலுவைச் சங்கம் விவசாய உள்ளீட்டுப் பொருட்களை வழங்கி வருகிறது.

ஒன்றிணைந்த உதவித்திடடத்தின் கீழ் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மறறும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆகியவற்றின் அனுசரணை யுடன் இத்திட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

இதனடிப்படையில், முதற்கட்டமாக நேற்று பூநகரி செட்டிகுறிச்சி மற்றும் ஞானிமடம் ஆகிய இடங்களி லுள்ள விவசாயிகளுக்கு வவசாய உள்ளீட்டுப் பொருட்களை இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

அத்துடன், இன்று பரந்தன் சென் அன்ரனீஸ் தேவாலயத்திலும், எதிர்வரும் 8ஆம் திகதி பரந்தன் கோவில வயல் பகுதியிலும், 10ஆம் திகதி உருத்திரபுரம் வடக்கிலும், 11ஆம் திகதி ஸ்கந்தபுரத்திலும், 14ஆம் திகதி பெரிய பரந்தனிலும், 15ஆம் திகதி பரமன்கிராய் பூநகரியிலும், 16ஆம் திகதி பள்ளிக்குடாவிலும், 17 ஆம் திகதி மட்டுவில் நாடு கிழக்கு, மற்றும் மேற்குப் பகுதியிலும் இவ்உதவு பொருட்கள் வழங்கப்படவுள்ளதாகத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அறிவித்துள்ளது. (உ-43)

## இன்று ஒரு தகவல்

# மனச்சிக்கல்

வாழ்க்கை என்பது என்ன? காலையில் எழுந்திருப்பது. காலைக்கடன்களை முடிப்பது. உணவு உண்பது. பயணம் செய்வது. உழைப்பது. வானொலிகேட்பது. தூங்குவது இது தான் வாழ்க்கையா? உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ள நாம் நேரம் ஒதுக்குகின்றோமா? என்று பார்த்தால் நம்மில் யாருமே அப்படிச்செய்வதில்லை.

உணர்ச்சிகளை நாம் சரிவரப் பகிர்ந்து கொண்டோமானால் மனிதநேயம் வளரும்.

இதன்போது எனக்கு ஓர் உண்மைச் சம்பவம் நினைவுக்கு வருகின்றது.

ஒரு மாணவி மூன்றாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கின்றாள். இந்தப் பிள்ளை ஒருநாள் தனது தாயிடம் போய் "அம்மா எதிர்வரும் சனிக்கிழமை நீங்கள் எனது பாடசாலைக்கு வாருங்கள். வந்து எனது தேர்ச்சி அறிக்கையை வாங்கிக் கொள்ளுங்கள்" என்றதாம்.

தாயாருக்கோ மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால் இந்தப் பிள்ளை ஒருமுறை கூடத் தனது தாயாரை இப்படி அழைத்தது இல்லை. ஒவ்வொரு முறையும் தனது தந்தையைத்தான் அழைத்துச் செல்லும். ஒருவேளை தந்தை ஊரில் இல்லை என்பதால் தன்னை வரும்படி அழைக்கின்றதா என்று யோசித்தார்.

காரணம் என்னவென்றால் இந்தத் தாயாருக்கு முகத்தில் ஒரு தீக்காயம். வலது கையில் பெரிய ஓர்வடு. இதனால் தனது தாயாருடன் பெரிதாக ஒட்டுவதில்லை இந்தப் பிள்ளை. மற்றவரிடம் தாயை அறிமுகப்படுத்தவும் செய்யாது. சிறுமிதானே காலப்போக்கில் சரியாகிவிடும் என்று எண்ணி விட்டுவிட்டனர்.

ஆனாலும் அந்தச் சிறுமிக்குத் தாயாரை எப்படி பள்ளிக்கூடம் அழைத்துச் செல்வது என்று தயக்கமும் இருந்தது. சனிக்கிழமையும் வந்தது. தாயாரை அழைத்துச் செல்கின்றாள் சிறுமி. சிலரிடம் மட்டும் தாயாரை அறிமுகம் செய்து வைக்கின்றாள். தனது வகுப்பறைக்கு அழைத்துச் சென்று ஆசிரியரிடம் அறிமுகம் செய்து வைத்துவிட்டுச் சிறிது தள்ளி நிற்கின்றாள். ஆனாலும் இவர்கள் பேசிக்கொள்வது சிறுமியின் காதில் நன்கு விழுகின்றது.

ஆசிரியர் சிறுமியின் தாயாரிடம் கேட்கின்றார். "உங்களுக்கு இந்தத் தீக்காயம் எப்படி ஏற்பட்டது?" என்று.' தாயார் கூறுகின்றார். "எனது மகளுக்கு ஒருவயது இருக்கும்பொழுது எனக்கு நிமோனியாக்காய்ச்சல் வந்திருந்தது. கைகால்கள் சோர்ந்து போய்விட்டன. பலமணிநேரங்கள் தொடர்ந்து மூர்ச்சையாகவே இருப்பேன். வெளியில் என்ன நடக்கின்றது என்றே தெரியாது. அப்போதெல்லாம் எனது கணவர்தான் சமையல் செய்வார். சமைத்து உணவை எனது தலைமாட்டில் வைத்துவிட்டு அலுவலகம் சென்றுவிடுவார்.

ஒருநாள் எனக்கு வெப்பம் பரவுவது போன்றதோர் உணர்வு ஏற்பட்டது. கண்ணைத் திறந்து பார்த்தால் எனது வீடு தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தோம். ஏனைய எல்லோரும் தத்தமது உடைமைகளை எடுத்துக்கொண்டு வெளியே ஓடிவிட்டனர். ஆனால் எனது குழந்தை பக்கத்து அறையில் தொட்டிலில் படுத்திருந்தது. குழந்தையை யாருமே தூக்கவில்லை.

எனக்குள் எப்படித்தான் அந்த வேகம் ஏற்பட்டதோ தெரியவில்லை. பலநாட்கள் படுக்கையாக இருந்த நான் ஓடிச்சென்றேன். எனது குழந்தையை மார்போடு அணைத்துக்கொண்டு வெளியே ஓடிவந்தேன. அப்போது எரிந்து கொண்டிருந்த தூண் என்மீது விழுந்தது. குழந்தைமீது நெருப்பு விழுந்துவிடக்கூடாது என்பதற்காக எனது முகத்தில் அதனைத் தாங்கிக்கொண்டேன். அதனால் தான் எனக்கு இந்த வடு ஏற்பட்டது என்றார்.

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த அந்தச் சிறுமி ஓடிவந்து தாயாரைக் கட்டிப்பிடித்து எந்த வடுவிற்காக தாயை வெறுத்ததோ அந்த வடு மீது முத்தமழை பொழிந்ததாம்.

உணர்வுகளைக் கூறி இது எதனால் வந்தது என்று தெரிந்திருந்தால் அந்தச் சிறுமி தனது தாயாரைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கும்.

பல நேரங்களில் நம்மைச் சேர்ந்தோரிடம் நமது உணர்வுகளைச் சரிவரக்கூறுவதில்லை. மலச்சிக்கல் என்று கேள்விப்பட்டிருக்கின்றோம். இது மனச்சிக்கல்.

மனச்சிக்கல் என்பது உணர்வுகளை வெளியே சொல்லாமல் விடுவதால் ஏற்படுவது. நமக்கு நெருங்கியோரிடத்தில் நமது உணர்வுகளை வெளிப்படுத்துவது அவசியமானதொன்றல்லவா!

*என் .டி. ஸ்ரீதரன்*

## கிறிஸ்தவ மதகுருவை நாடுகடத்துவது குறித்து மேல்நீதிமன்றில் விசாரணை

(கொழும்பு)

அமெரிக்காவில் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவிருக்கும் திலக்ஜயவர்த்தன என்ற கிறிஸ்தவ மதகுருவை நாடு கடத்துவது பற்றிய விசாரணைகள் கொழும்பு மேல்நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணை எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

2 மாத காலத்திற்கு இவ்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

அதுவரை மேற்படி கிறிஸ்தவமதகுரு வளக்கமறியலில் இருக்க வேண்டும் என கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

கலிபோர்னியாவில் உள்ள தேவாலயத்தில் கடமையாற்றிய கிறிஸ்தவ மதகுருவான இவர், அக்காலப்பகுதியில் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்டு அந்நாட்டு பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த சமயம் அங்கிருந்து இலங்கைக்கு தப்பி வந்து பல வருடகாலம் மறைந்து வாழ்ந்த பின்னர் மேல்நீதிமன்றில் சரணடைந்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-60,10)

## தபால் நிலைய நிர்மாணப் பணிகளை நவம்பர் நடுப்பகுதிக்குள் முடிக்கவேண்டும்

### மக்கள் தொடர்பாடல் அமைச்சர் பணிப்புரை

(கொழும்பு)

வடபகுதியில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் தபால் நிலையங்களின் நிர்மாண வேலைகளை எதிர்வரும் நவம்பர் மாதம்15 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யுமாறு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அஞ்சல் அதிபருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

யாழ்.பிரதம தபாலகம் உட்பட மேலும் 5தபால் நிலையங்கள் வடபகுதியில் அமைக்கப்பட்டு வருவதுடன். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 10 தபால் நிலையங்களும் தற்போது அஞ்சல் திணைக்களத்தினால புனரமைக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

இந்நிலையில்,எதிர்வரும் நவம்பர் மாதமளவில் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை தாம் மேற்கொள்ள விருப்பதாகவும் அதற்கிடையில் தபால் நிலையங்களின் நிர்மாணப் பணிகள்யாவும் பூர்த்தியாக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அஞ்சல் அதிபருக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை,தற்போது புனரமைக்கப்பட்டுவரும் 10 தபால் நிலையங்களுக்கும் தேவையான உபகரணங்கள் தமது திணைக்களத்தினூடாக வழக்கப்பட்டிருப்பதாகவும்,யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல உபதபால் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதியைப பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அஞ்சல் திணைககளம் தகவல் வெளியிட்டுள்ளது. (உ-10)

## இராசி பலன்

**07.10. 2003**

**(புரட்டாதி,20,செவ்வாய்)**

**துவாதசி - மு.ப. 11.39 வரை**

**சதயம் - ந.இ. 12.04 வரை**

**இராகுகாலம் - 3.02 - 4.32**

**சுபநேரம் - 10.32 - 12.02**

பிரதோஷ விரதம்

**மேடம்**
எடுத்தகாரியம் கைகூடும், தனலாபம், தொழில் நன்மை, பூர்வபுண்ணிய கருமம்

**இடபம்**
மேன்மை, ஆரோக்கியம், காரிய நன்மை, செய்தொழில் விருத்தி

**மிதுனம்**
எதிர்பாராத செலவு, புத்திரரால் கவலை, முயற்றி தாமதம், கட்டுப்பாடு

**கடகம்**
சரீர வியாதி, கலகம், தொழில் கஷ்டம், காரிய தாமதம்

**சிங்கம்**
தேக சௌக்கியம், காரிய நன்மை, செய்தொழில் முன்னேற்றம், பொருள் சேர்க்கை.

**கன்னி**
செல்வாக்கு, பிரயாணம், உறவினர் உதவி, தேக நலம்.

**துலாம்**
சொத்துக்களால் கவலை, உடல் நலக் குறைவு, காரிய தாமதம், தனவிரயம்.

**விருச்சிகம்**
புதிய விடயம், மனச்சோர்வு, முயற்சி தாமதம், வேலைப்பழு.

**தனுசு**
தடைப்பட்ட காரியம் கைகூடும், பிரயாணம், நண்பர்கள் உதவி, தனவரவு.

**மகரம்**
அதிக வார்த்தை, தனவிரயம், போசன சுகக் குறைவு, மனஸ்தாபம்.

**கும்பம்**
மனக்குழப்பம், வெகுமானம், காரிய சித்தி, கௌரவமான நிலை.

**மீனம்**
வீண் அலைச்சல், தனவிரயம், உறவினர் மனஸ்தாபம், சயன சுகக் குறைவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**-- வளவன்.**

## மழைநீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் பற்றி மக்களுக்கு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மழைநீரைக் குடிநராக மாற்றும் திட்டம் தொடர்பாக மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் வகையிலான கலந்துரையாடலொன்று கடந்த செவ்வாயன்று ஊர்காவற்றுறைப் புனிதஅந்தோனியார் கல்லூரியில் அதிபர் அருட்தந்தை ஜே.ஏ.ஜேசுதாஸ் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் தேசிய நீர்வழங்கல வடிகால் அமைப்புச்சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் ரி.பாரதிதாசன் இதுதொடர்பாகக் கருத்து வெளியிடுகையில்,

யாழ்.குடாநாட்டில் மழைநீரானது உரியமுறையில் சேகரிக்கப்பட்டு சிறந்த முறையில் பயன்படுத்தப்படுமாயின் இங்குள்ள மக்களின் தேவைகளைப் பூாத்தி செய்வதற்கு அந்நீர் போதுமானவையாக அமையும்.

எனவே,யாழ்.குடாநாட்டில் மழைநீரைச் சேமித்து குடிநீராக்க வேண்டியதன் அவசியம் குறித்து ஆராயப்படுமானால், இங்கு மழைநீரை உரிய முறையில் சேகரித்துவைப்பதற்கான திட்டங்களைப் பாரிய அளவில் முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில், அருட்தந்தை ஜே.ஏ. ஜேசுதாஸ்,பொறியியலாளர்களான பாலசுப்பிரமணியம்,இராஜநாயகம், மதுரராசா ஆகியோரும் மற்றும பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (உ-18)

## உயிர்கொல்லிக்கருகே உணவுப்பொருட்கள் உரிமையாளருக்கு தண்டப்பணம்

(சுதுமலை)

வலி-மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சங்கானை மற்றும் சித்தன்கேணி பகுதிகளிலுள்ள பலசரக்குக் கடைகளில் உலர் உணவுப் பொருட்களுடன் உயிர்கொல்லி மருந்துகள் மற்றும் நச்சுத்தன்மையான பொருட்களை அருகே வைத்து விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில், யாழ். மாவட்ட உணவு மற்றும் மருந்துப் பரி சோதகர்களும், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும் ஒன்றிணைந்து வியாபார நிலையங்களில் நடத்திய திடீர் பரிசோதனையின் போதே இவ்விடயம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 3 வியாபார நிலையங்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டபோது, நீதிவான் கடை உரிமையாளர்கள் மூவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளதுடன், இவ்வாறான செயற்பாடுகள் இனிவரும் காலங்களில் இடம்பெறாத வண்ணம் அவதானமாக இருக்கும்படியும் விளக்கமளித்துள்ளார். (தி-117,252)

## தீர்வு யோசனைகளை முன்வைத்தால் பொ.ஐ.முன்னணியையும் பேச்சில் இணைக்கலாம்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் யோசனைகளை முன்வைத்தால் அவர்களையும் தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் சேர்த்துக்கொள்ளலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பெந்தோட்டைப் பகுதிகளில் அமைககப்பட்டுவரும் சுற்றுலா விடுதியைப் பார்வையிடச் சென்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இனப்பிரச்சினை தீர்வு குறித்த அரசின் இடைக்கால நிர்வாகசபை யோசனைகளில் மாத்திரம் விடுதலைப்புலிகள் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. விடுதலைப்புலிகள் விரும்பினால் பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வைத்துள்ள யோசனைகள் குறித்தும் கவனம் செலுத்தலாம்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின்யோசனைகள் எதுவாக இருந்தாலும் அது தொடர்பாகக் கலந்துரையாடி சமா தானப் பேச்சுவார்த்தைகளை முன்னோக்கிச் செல்வதே சிறந்ததாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம)

## திலீபன் மருத்துவமனையில் வைரஸ் காய்ச்சலுக்கு 230பேர் சிகிச்சை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கிலுள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் கடந்தமாதம் ஆயிரத்து 457 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக மருத்துவமனைப் புள்ளி விபரங்கள் மூலம் தெரியவருகிறது.

கடந்த மாதத்தில் மாத்திரம் மேற்படிமருத்துவ மனையில், வைரஸகாய்ச்சலுக்கு 230பேரும், மலேரியாகாய்ச்சலுக்கு 85பேரும்,சுவாசவழித் தொற்றுக்காக 113 பேரும் ஆஸ்துமா நோய்க்காக 63பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அத்துடன்,உயர் குருதி அமுக்கத்திற்காக 18பேரும் குருதிச்சோகை நோய்க்காக 15பேரும் பாம்புக்கடிக்காக ஒருவரும் மற்றும் ஏனையநோய்களுக்காக 932 பேரும் மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. (உ-43)

## வாக்காளர் பட்டியல்களை கிராமசேவை அலுவலர்களே தயாரிக்க வேண்டும்

### அமைச்சர் அலுக்அலுவிகார பணிப்பு

(கொழும்பு)

கிராமசேவை உத்தியோகத்தர்கள் வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதில் பொதுமக்களுக்கு ஏதாவது நீதியீனங்கள் இழைக்கப்பட்டிருந்தால், அதுபற்றி தமக்கு உடன் அறிவிக்கவேண்டும் என உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாக்காளர்கள் நிரப்பவேண்டிய சகல படிவங்களையும் அவர்களுக்கு கையளிக்கவேண்டிய பொறுப்பு கிராம சேவை உத்தியோகத்தர்களுடையது.

இதனை விடுத்து இந்தப் படிவங்களை வாக்காளர்களுக்குத் தாமே நேரடியாக விநியோகிக்காமல் வேறு நபர்களை சில கிராமசேவை உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தி வருவதாகப் பலமுறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன.

அத்துடன், வாக்காளர் பட்டியலில் இருந்து சில பெயர்கள் நீக்கப்பட்டு விட்டதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே, இத்தகைய முறைப்பாடுகள் குறித்து மாவட்டச் செயலாளர்கள் உடன் விசாரணை நடத்த வேண்டும் என்றார். (தி-60,10)

## சிறைச்சாலைச் சட்டமூலத்தில் மாற்றம்செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

147 வருடங்களுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட சிறைச்சாலைகள் அதிகார சட்டமூலத்தில் சில மாற்றங்கள் கொண்டுவரப்படுவது பற்றி பரிசீலனை செய்து வருகின்றதாக சிறைச்சாலை ஆணையாளர் புறூம் மர்சூத் தெரிவித்துள்ளார்.

பூசா சிறைச்சாலையில் கடந்த சனியன்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி தொடர்ந்து கூறுகையில்,

தற்போது சேவையில் உள்ள 5 ஆயிரத்து 800 சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு ஆயுள் காப்புறுதி மற்றும் விபத்துக் காப்புறுதி வழங்குவது பற்றியும் ஆராயப்படவிருக்கின்றது.

அத்துடன், சிறைக்கைதிகளை மாதத்தில் 4 தடவைகள் வெளியார் வந்து சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்படவிருக்கின்றது.

இதுவரை காலமும் மாதத்தில் ஒரு தடவையே சிறைக்கைதிகளை வெளியார் சந்திப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

எனவே, புதிய நடைமுறையின்படி சிறைக் கைதிகளின் நலன்கள் மற்றும் அவர்களின் தேவைகள் பூர்த்திசெய்க்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்றார். (தி-60,10)

## ஜெயவர்த்தனபுர பல்கலை ஜே.வி.பி. ஆதரவாளரின் குகை

### பேராசிரியர்கள் அமைச்சுக்குக் கடிதம்

(கொழும்பு)


ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற மாணவர் மோதல் சம்பவங்களைத் தொடர்ந்து, பல்கலைக் கழகத் துணைவேந்தரைப் பதவி விலகுமாறு கோரப்பட்டது.

இதற்கு எதிராக அப் பல்கலைக்கழகத்தில் 9 பேராசிரியர்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றை 3 ஆம் நிலைக் கல்வி அமைச்சு கபீர் ஹாசிமுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அக்கடிதத்தில்,

யார் என்ன சொன்னாலும், இடதுசாரி மாணவர் குழுக்களால் மிருகத்தனமாக கொலை செய்யப்பட்ட ஒவிரிகல சமந்தவின் கொலைக்குப் பின், துணைவேந்தர் பல்கலைக் கழகத்தில் ஒழுங்கை நிலைநாட்டியுள்ளார்.

இப்பல்கலைக்கழகம் மக்கள் விடுதலை முன்னணி ஆதரவாளர்களின் குகை. இக்குழுக்களின் நடவடிக்கைகள் முடக்கப்படாவிட்டால், பல்கலைக் கழகத்தில் மேலும பலவன்முறைகள் இடம்பெறலாம். இதனால் மாணவர்கள் தமது கல்வியை அமைதியாகக் கற்க முடியாது போகும் என அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-6)



நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவ நிகழ்ச்சிகளை நேர்முக வர்ணனையாக உலகத் தமிழர் வானொலியூடாகத் தொகுத்து வழங்கிய அறிவிப்பாளர் பிரசாந்தை வலம்புரிப் பத்திரிகை நிறுவன முகாமையாளர் எஸ்.வெற்றிவேலாயுதம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். இந்நிகழ்வு அண்மையில் நல்லூர் 63 நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெற்றது. (படம்:எஸ்.கவிதரன்)

## தடுப்புகாவல் கைதிகள் இறப்பு சட்டமா அதிபரின் கீழ் விசாரணை

### பிரதம நீதியரசர் உத்தரவு

(கொழும்பு)

பொலிஸ் காவலில் இருக்கும் போது உயிரிழக்கும் கைதிகள் தொடர்பான விசாரணைகளை எதிர்காலத்தில் சட்டமா அதிபர் நேரடியாக-மேற்கொள்ள வேண்டும் என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா பணிப்புரை விடுத்துள்ளார்.

இம்மரணங்கள் தொடர்பான விசாரணைகள் சட்டமா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டு, பின்னர் விசேட பொலிஸ்பிரிவினரால் மேலதிக விசாரணைகள் நடத்தப் படவேண்டும்.

இவ்வாறு உயிரிழப்போர் தொடர்பான விசாரணைகள் குறிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸாரினால் நடத்தப்படக் கூடாது எனவும்,

சட்டமாஅதிபரின் கண்காணிப்பின் கீழ்,விசேட பொலிஸ் உத்தியோகத்தர்களினால் விசாரணைகள் நடத்தப்படும் போது,அது நியாயமானதாக இருக்கவேண்டும் எனவும் நீதியரசர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தடுப்புக் காவலில் உள்ள கைதிகளின் இறப்பு அதிகரித்து வருவதை அடுத்தே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (தி-61)

# செய்தித் துளிகள்

### தமிழ்த்தினப் போட்டி

(மருதங்கேணி)

அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் 9,10 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளன.

கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவுப் பணிப்பாளர் நல்லதம்பி நடராசா இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்.

போட்டிகள் யாவும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, இராமநாதன் இந்துக் கல்லூரி, முஸ்லிம் மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (தி-35)

### புத்தாடைகள் அன்பளிப்பு

(தாவடி)

இந்து கலாசார அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க அல்லைச் சிவனாலய அறங்காவல் சபையினரால் அல்லைப்பிட்டிப் பராசக்தி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டின் கீழுள்ள 20 மாணவர்களுக்குத் தீபாவளித் தினத்தன்று புத்தாடைகள் வழங்கப்படவுள்ளன. (தி-117)

### சிறுமி கடத்தல் பற்றி பொலிஸ் விசாரணை

(யாழ்ப்பாணம்)

சங்குவேலியைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமி கடத்தப்பட்டது தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

13 வயதான இச்சிறுமியை அதே இடத்தைச் சேர்ந்த மூவர் கடத்திச் சென்றதாகவும், அங்கு அம் மூவரும் வன்னி காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டதாகவும், அந் நபர்களிடம் இருந்து சிறுமி மீட்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

சிறுமி தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் பற்றி யாழ். வைத்தியசாலை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.(பி-7)

### பெண்களுக்கு சட்ட உதவி

(கொழும்பு)

பெண்களுக்கென விசேட சட்ட உதவிததிட்டம் ஒன்று விரைவில் அமுல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமைகள் அபிவிருத்திக்கான வழக்கறிஞர் அமைப்பு இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருப்பதாகவும், இந்தத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் உள்ள பெண்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முதல் கட்டமாக அம்பாந்தோட்டையில் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (தி-60,10)

### இலவச வகுப்பு

(வடலியடைப்பு)

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் 14ஆம் திகதி முதல் சைவப் புலவர் மற்றும் இளஞ்சைவப் புலவர்களுக்கான வகுப்புக்கள் யா/நாவலர் மகாவித்தியாலயத்தில் நடாத்தப்பட்டு வருகின்றன.

எனவே, சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கு விண்ணப்பித்த சகல மாணவர்களையும் இவ்வகுப்புக்களில் பங்கு பற்றுமாறும், இவ்வகுப்புக்கள் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணிமுதல் பி.ப. 1.00 மணி வரை இலவசமாக நடாத்தப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (தி-21)

### விபத்தில் இருவர் காயம்

(ஆனைப்பந்தி)

வேம்படிச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற பேருந்து - ஆட்டோ விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆட்டோச் சாரதி கே. இராசன் (வயது-30), பயணி ஒருவரும் காயங்களுக்குள்ளாகியதுடன், ஆட்டோவும் பலத்த சேதங்களுக்கு உள்ளானது. (பி-109)

### காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்றுகொண்டிருந்த வேளை மோட்டார் வாகனம் மோதியதில் காயமடைந்த புத்தூர் கிழக்கைச் சேர்ந்த தம்பிமுத்து (வயது-57) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து தற்போது தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. (பி-7)

### அபராதம் விதிப்பு

(தாவடி)

கோடியல் போத்தலை விற்றமின் 'சீ' எனக்கூறி ஏமாற்றி விற்ற நபருக்கு எதிரான வழக்கில், மல்லாகம் மாவட்ட நீதிமன்றினால் மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (தி-117)

### மலசலகூட பொருட்கள் விநியோகம்

(தாவடி)

அல்லைப்பிட்டிக் கிராமத்தில் மலசலகூடம் இல்லாத 125 குடும்பங்களுக்கு இந்து கலாசார அமைச்சு தலா 10 பைக்கற் சீமெந்தையும் மலசல கோப்பை ஒன்றையும் வழங்கியுள்ளது. (தி-117)

### இலங்கை - இஸ்ரேல் இணக்கப்பாடு

(கொழும்பு)

சுதந்திர வர்த்தகத்தை மேற்கொள்ளவும், விமான சேவைக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் இலங்கையும்-இஸ்ரேலும் இணக்கம் கண்டுள்ளன.

அண்மையில் இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்க, இஸ்ரேலின் வர்த்தக அமைச்சர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையினை அடுத்தே இவ் இணக்கப்பாடு காணப்பட்டது.

இதன் பிரகாரம் இரு நாடுகளிற்கும் இடையிலான வர்த்தக உறவுகள் மேலும் வலுப்படுத்தப்படும் என வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (உ-63,10)

### பண்ணிசை போட்டிகள்

(கந்தரோடை)

சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான முதற் கட்டத் திருமுறைப் பண்ணிசைப் போட்டிகள் எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளன.

சுழிபுரம் பகுதியில் உள்ள 15 பாடசாலைகளுக்குமான போட்டிகள் பண்ணாகம் மெய்கண்டான மகா வித்தியாலயத்திலும், வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த 16 பாடசாலைகளுக்குமான போட்டிகள் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியிலும் நடைபெறும் என சங்கானை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா அறிவித்துள்ளார். (தி-103)

### நாடகப் போட்டி

(மருதங்கேணி)

சிறுவர் தினத்தை முன்னிட்டு துணுக்காய் கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட சிறுவர்களுக்கான நாடகப் போட்டியில் யோகபுரம் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும், கூழாமுறிப்புப் பாடசாலை 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளன.

இப்போட்டிகள் கடந்த திங்கட்கிழமை மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறறன. (தி-35)

### தவறணை இடமாற்றம்

(குப்பிளான்)

அனலைதீவு வடக்கு மக்கள் குடியிருப்பு அருகில் இருந்த கள்ளுத் தவறணை இடம்மாற்றப்பட்டுள்ளது.

இக் கள்ளுத் தவறணை மக்கள் குடியிருப்பு இல்லாத கடற்கரைப் பிரதேசத்தில் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. (தி-20)

### மெய்ப்பாதுகாவலாளியின் துப்பாக்கி மாயம்

(கொழும்பு)

குருநாகல் பிரதேச பிரபல அரசியல்வாதி ஒருவரின் மெய்ப்பாதுகாவலரிடம் இருந்த ரி-56 ரக தன்னியக்கத் துப்பாக்கியும் 30 தோட்டாக்களும் காணாமல் போயுள்ளன.

இவ் அரசியல்வாதிக்கு குளியாப்பிட்டி, கிரியுல்ல, பண்ணல ஆகிய 3 பொலிஸ் நிலையங்களில் இருந்து 12 மெய்ப்பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவரின் துப்பாக்கியும் தோட்டாக்களுமே காணாமல் போயுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை நடத்துவதுடன், காணாமல் போன துப்பாக்கியையும், தோட்டாக்களையும் கண்டுபிடிக்க பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். (தி-61)

### முன்பள்ளி அபிவிருத்திக்கு நிதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சென். தோமஸ் சனசமூக நிலையம் மற்றும் சென். தோமஸ் முன்பள்ளி ஆகியவற்றின் அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து 1 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சனசமூக நிலையத்திற்கு 50 ஆயிரம் ரூபாவிற்கு நூல்கள் கொள்வனவிற்கும், முன்பள்ளிக்கு 5[illegible] ஆயிரம் ரூபாவிற்குத் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சனசமூக நிலையத் தலைவர் தெரிவித்துள்ளார். (உ-52)

### குளம் புனரமைப்பு

(கந்தர்மடம்)

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தில் உள்ள கொக்களிக்குளம் அப்பகுதி விவசாயிகளால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன், புங்குடுதீவு பெருங்காட்டு வடக்கு விவசாய சம்மேளனத்தின் மேற்பார்வையின் கீழ் இப்பணி இடம்பெற்று வருகின்றது.

அத்துடன், மேற்படி பகுதியில் உள்ள வைரவர் கோவில் வீதியும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் அப்பகுதி மக்களால் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-112)

### காரைநகரில் மாடுகளுக்குத் தடுப்பூசி

(தொல்புரம்)

காரைநகரில் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் தடுப்பூசி இம்மாதம் 1ஆம், 2ஆம் திகதிகளில் ஏற்றப்பட்டது. இதுவரை தடுப்பூசி போடாது தவறவிட்ட பண்ணையாளர்கள் நாளை புதன்கிழமை காரைநகர் மேற்கு வீதியில் அமைந்துள்ள பிரதேச சபைக் கட்டடத்தில் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(பி-70)

### தொலைபேசிகள் செயலிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நாவற்குடாவில் இனந்தெரியாத நபர்களினால் தொலைபேசி இணைப்புக்களுக்கான நிலத்தடிக் கேபிள்கள் வெட்டி எடுக்கப் பட்டுள்ளன.

இதனால், வெளியிடங்களுக்கான 2 ஆயிரத்து 500 தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தாண்டசம்வெளி, ஊரணி, இருதயபுரம் ஆகிய பகுதிகளில் தொலைபேசிக் கேபிள்கள் வெட்டபட்டுள்ளதனால் 250 தொலைபேசிகள் செயலிழந்துள்ளன. (த)

### குடும்பநல உத்தியோகத்தர் இல்லை

புன்னாலைக்கட்டுவன் பகுதிக்கு நிரந்தர குடும்பநல உத்தியோகத்தர் நியமிக்கப்படவில்லை.

இதனால், அக்கிராமத்தில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். (தி-61)

# சேது சமுத்திரத்திட்ட அறிக்கை கிடைத்ததும் சாதகமான முடிவு



கலாசிருஷ்டி அமைப்பின் சார்பில் சென்னை ஆழ்வார் பேட்டை சி.பி.ஆர்ட் மையத்தில் கடந்தவெள்ளிக்கிழமை தொடங்கிய அனைத்திந்திய கைவினைப் பொருள் கள் கண்காட்சியில் இடம் பெற்றுள்ள வெண்ணெய் திருடும் கண்ணன் அனைத்துப் பார்வையாளர்களினதும் கவனத்தை ஈர்த்திருந்தது.

## டாக்டர் ராமதாஸிடம் மத்திய அமைச்சர் உறுதி

(புதுடில்லி)

சேது சமுத்திரத் திட்டத்தின் முக்கியத்துவத்தை மத்திய அரசு உணர்ந்திருப்பதாகவும், அதன் இறுதிக்கட்ட ஆய்வு அறிக்கை கிடைத்தவுடன் சாதகமான முடிவினை அரசு அறிவிக்கவுள்ளதாகவும் மத்திய போக்குவரத்துத்துறை அமைச்சர் சத்துரு சிங்ஹா தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் எஸ். ராமதாஸ் உடனான சந்திப்பின்போதே அமைச்சர் சத்துருசிங்ஹா இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் இது விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக சேது சமுத்திரத் திட்ட இறுதிக்கட்ட ஆய்வு அறிக்கை அரசிற்கும் கிடைத்துவிடும் என மேலும் அவர் கூறினார்.

சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்று தமிழ்நாட்டில் பதவியில் இருந்த பல அரசுகளும் வலியுறுத்தி வந்துள்ளன. இந்தத் திட்டத்தின்படி சேது சமுத்திரம் ஆழமாக்கப்பட்டு கப்பல் போக்குவரத்துகள் இலகுவாக்கப்படும் பட்சத்தில், தமிழ்நாட்டிலும், தமிழ்நாட்டின் ஏனைய இந்தியத் துறைமுகங்களும் பெரிதும் பயனடைய முடியும் என்று கருதப்படுகின்றது.

சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறும்போது, இப்பொழுது கொழும்பு, காலி துறைமுகங்களுக்கு வந்து செல்லும் கப்பல்களின் வருகை குறைந்துவிடும் என்றும், அதனால் இலங்கையில் கப்பல் வருமானம் வெகுவாகக் குறைந்துவிடும் என்றும் இலங்கை அரசு கவலை கொண்டிருக்கின்றது.

சேதுசமுத்திரத் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு அரசும், தமிழ்நாட்டு மக்களும் பெரிதும் பயனடைவார்கள் என்று தமிழ்நாட்டுப் பொருளியலாளர்கள் கருதுகின்றனர். (பி-2)



தரையில் ஓடும் சைக்கிள்களைப் பார்த்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் இங்கு காண்பது நீரில் ஓடும் ச்சைக்கிளையே. இச் சைக்கிள் இத்தாலி நாட்டில் தயாரிக்கப்பட்டு நியு,சிலாந்தின் தலைநகர் வெலிங்டனில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற படகுக் கண்காட்சியில் அந் நாட்டின் தொழிலதிபர் ஒருவர் நீரில் ஓட்டிச் செல்வதையே இங்கு காண்கிறீர்கள்

## தென்கிழக்காசிய நாடுகளை மிகப்பெரிய சுதந்திர வர்த்தக வலயமாக மாற்ற ஆசியான் நாடுகள் திட்டம்

(ஜகார்த்தா)

தென்கிழக்காசிய நாடுகளை மிகப்பெரிய சுதந்திர வர்த்தக வலயமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைத் திட்டமொன்றை ஆசியான் நாடுகளின் அமைச்சர்கள் தயாரித்துள்ளனர்.

பாலித்தீவின் 2ஆவது பிரகடனம் என்று குறிப்பிடப்பட்ட இந்த அறிக்கை இன்றும், நாளையும் இந்தோனேசியாவின் பாலித்தீவில் நடைபெறவுள்ள ஆசியான் தலைவர்களின் மாநாட்டில் வெளியிடப் படவுள்ளது.

சீனா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் இம்மாநாட்டில் அவதானிகள் நிலையில் பங்குபற்றவுள்ளன.

இதேசமயம், ஆசியான் வெளி விவகார அமைச்சர்கள் நேற்று முன் தினம் நடத்திய உத்தியோகப்பற்றற்ற கூட்டம் ஒன்றில் மியான்மார் விவகாரம் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளனர். இந்தக் கூட்டத்தில் இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் கருத்து வெளியிடுகையில், ஜனநாயக முன்னேற்றம் சம்பந்தமான நடவடிக்கைகளை மியான்மரின் இராணுவ ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார்.

மியான்மரின் ஜனநாயக நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கான கால அட்டவணைகள் பற்றி இராணுவ ஆட்சியாளர்கள் இதுவரை எந்தவொரு அறிவித்தலையும் வெளியிடவில்லை.

சர்வதேச அரங்கில் மியான்மர் பின்பற்றிவரும் கொள்கைகள் சம்பந்தமாக அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (பி-2)

உலக தரிசனம்



அண்மையில் அனைவரையும் பீதியில் ஆழ்த்திய பேய்ப் படம் போலியானதென்பதை கம்பியூட்டர் கிராபிக்ஸ் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார் பெங்களூரைச் சேர்ந்த ஜீ.வி. கல். நடராஜ் இவர் தனது புகைப்படத்தையும் பேய் போன்று மாற்றி அமைத்து நிரூபித்துள்ளார். இப் படத்தின் (வலது) புறத்தில் காணப்படுகிறார் நடராஜ்

## இந்தியப் படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் 7 பெண்கள் உட்பட 12 பொதுமக்கள் பலியாகினர்

### பாகிஸ்தான் அதிகாரிகள் குற்றச்சாட்டு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் காஷ்மீர்ப் பிரதேசத்தில் இந்தியப் படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் 7 பெண்கள் உட்பட 12 பேர் கொல்லப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மேலும் 19 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானின் நிர்வாகத்தின்கீழ் உள்ள நீலம் பள்ளத்தாக்கில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகவும், இந்தியப் படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை ஆரம்பித்த இந்தத் தாக்குதல் இரவு வரையும நீடித்ததாகவும், அண்மைக் காலங்களில் இந்தியப் படையினர் நடத்திய மிகவும் பாரதூரமான தாக்குதல் இது எனவும் பாகிஸ்தான் பிரதி ஆணையாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, இத்தாக்குதல் சம்பவம் குறித்து இந்தியப் படைத் தரப்பினர் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

பாகிஸ்தானில் இருந்து காஷ்மீருக்குள் ஊடுருவ முயன்ற தீவிரவாதிகளை ஒழிக்கவே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. (பி-9)

## உலக சமூக மன்றத்தின் சமாதானக் கப்பல் 600 பேருடன் இன்று சென்னை வருகின்றது

(சென்னை)

அமைதியையும், சர்வதேச ஒத்துழைப்பையும் வலியுறுத்தி உலக சமூக மன்றத்தின் அமைதிக் கப்பல் ஒன்று இன்று சென்னை துறைமுகத்திற்கு வரவுள்ளது.

600 இற்கும் அதிகமான ஜப்பானியர்களைக் கொண்ட இந்தப் பயணிகள் கப்பல் தலைநகர் டோக்கியோவில் இருந்து கடந்தமாதம் 21ஆம் திகதி தனது பயணத்தை ஆரம்பித்தது. இந்தியத் துணைக் கண்டத்தின் அணுவாயுதங்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளைப் பரவலாக்குவதைக் குறைக்கவேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு அமைதி அம்சங்களை முன்னிலைப்படுத்தி இவர்கள் தமது பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

தாய்வான், வியட்நாம், சிங்கப்புர் ஆகிய நாடுகள் வழியாக 43வது கடல்வழிப் பயணத்தை மேற்கொண்டுள்ள இந்த அமைதிக் கப்பல சென்னைத் துறைமுகத்திற்கு வருவது இதுவே முதற்தடவையாகும் என செய்திகள் கூறுகின்றன. (பி-2)

## ஐ.நா. தலைமை தாங்கினால் ஈராக்கிற்கு உதவ சர்வதேச சமூகம் தயாராகவுள்ளது

### ஜேர்மன் அதிபர் கூறுகிறார்

(பேர்லின்)

ஈராக்கில் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் தலைமை தாங்கினால் சர்வதேச சமூகம் உதவுவதற்குத் தயாராக இருப்பதாக ஜேர்மனிய அதிபர் ஜெஹாட்ஸ்ரோடர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.தலைமைதாங்கும் பட்சத்தில் ஏனைய நாடுகளின் ஒத்துழைப்பு அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

. எகிப்தில் வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் ஜேர்மனிய இராணுவம் தலையிடாத போதிலும், அங்குள்ள பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் பயிற்சியளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். மேலும், எகிப்து, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அரசு ஆகிய நாடுகளுக்கான தனது விஜயத்தின்போது ஈராக்கின் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை வலியுறுத்தப் போவதாகவும் ஸ்ரோடர் மேலும் கூறியுள்ளார்.

(பி-2)

# நாடிவரும் மாணவர்களின்

**ஆசிரிய மணி எம்.எஸ்.ஸ்ரீதயாளனுடனான செவ்வியின் இறுதிப்பகுதி இங்கே தரப்படுகிறது.**

③

இது ஆசிரியர் தரங்கணிப்பு அல்ல. அப்படியானால் அரசாங்கம்-கல்வி அமைச்சு ஆகியன ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கும் தரங்கணிப்பாவது என்ன என நீங்கள் கேட்டுக்கொள்வது எனக்கும் கேட்கிறது; சொல்கிறேன். ஒரு ஆசிரியரின் சேவையின் தரம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால் ஒவ்வொரு ஆசிரியரும் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு முக்கியமான 6 பண்புகள் உள்ளன.

(அ) பாட ஆயத்தம் செய்யக்கூடியவராக இருத்தல்

(ஆ) கட்புல செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்த மாத்திரமல்ல தயாரிக்கவும் கையாளக்கூடியவராயும் இருத்தல்.

(இ) பாட ஆயத்தத்துக்கு ஏற்ப கற்பித்தல் தரம் சிறப்புடையதாய் இருத்தல.

(ஈ) கணிப்பீடுகளை நடத்தவும் பின்னர் பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆற்றல் உள்ளவராய் இருத்தல்.

(உ) இணைபபாட விதான செயற்பாடுகளில் சிரத்தையுடன் ஈடுபடலும் ஈடுபடுத்தப்படும் எல்லா மாணவர்களுக்கும் தரமான கல்விகிடைக்க வாய்ப்பளிக்கக் கூடியவராய் இருத்தல்.

(ஊ) கற்றல், கற்பித்தல் சார்ந்த அறிக்கைகள் மேற்கொள்ளக்கூடிய திறன்கள் உடையவராய் இருத்தல்.

இவ்வாறு ஆசிரியரிடம் இருந்து செயற்றிறன்களை எதிர்பார்க்கும் போது பின்வரும் பிரச்சினைகளையும் கவனித்து தீர்வுதரவேண்டிய நிலையும் உள்ளது.

I அமுலாக்கல் நடைமுறைப்படுத்தல் பற்றிய ஏற்பாடுகள் இன்னும் ஆசிரியர்களுக்கு தெளிவாகக் கிடைக்கவில்லை.

II பொறுப்புகள் வரையறுக்கப்பட்டு, எழுத்துருவில் ஆசிரியர்களுக்கு

**செவ்வி கண்டவர்: வித்தகன்**

கல்வி உலகும், சமூகமும் விரும்பும். நீங்களே நிதானியுங்கள். நல்லாசிரியர்கள நம் நாட்டின் நிறைந்த சொத்துக்கள்.

● **இன்று பாடசாலை நடை முறைகள் முன்னைய பாடசாலை களின் கற்றல், கற்பித்தல் நிலைமைகளில் இருந்து ஒரு புதிய கோணத்தில் அணுகப்படுவது பற்றிக் கூறினீர்கள். பாடசாலைகள் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கையை வளர்க்கும் இடங்களாக விளங்க வேண்டு மானால், ஆசிரியர்கள் எப்**

# ஆளுமைப் பண்புகளை தேடிப்பிடித்து

**படித்தும்மைத்தயார் செய்ய வேண்டும்?**

ஆம். உலகமயமாக்கல் நடவடிக்கைக்கு ஈடுகொடுக்கும் வகையில் கணனிக் கல்விக்குப் பாடசாலைகளில் மாணவர்களை வழி நடத்தவேண்டிய தேவை இன்று இருககின்றது. மனிதன், பணம், பொருள்கள், பொறிகள், முறைகள் என்ற 5 விதமாகப் பாடசாலை வளங்கள் முகாமைத்துவப்படுத்தப்பட்டுக் கற்றல், கற்பித்தல் கூட அந்த அடிப் படையில் பாடசாலைகளில் வழங்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் தான் நாட்டின் மூலதனங்கள் - நாட்டின் வளங்கள். ஆசிரியர்கள் இந்த வளங்களைச் செழிக்கச் செய்யவேண்டிய முகாமையாளர்கள். பாடசாலை என்ற நிறுவனத்தின் செயற்பாட்டின் மூலமாக நீங்கள் கேட்டவாறு மாணவர்கள் தன்னம்பிக்கையுடைய பிரஜைகளாக வெளியேறவேண்டும் என்பதே இன்றைய எதிர்பார்ப்பு என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். தன்னம்பிக்கையுள்ள மாணவ சமுதா

களுக்கு மேலாக கணிப்பீட்டு, முறைமைகள், பல்வேறு கணிப்பீட்டுக் கருவிகள் மூலம் (Assesment Tools) மாணவர்கள் திறன்களை, தேர்ச்சிகளை அளவிடுவது போன்ற முறைமைகளும், சிறப்பாகத் தகவல் தொழில் நுட்பம் (Information Technology) கணனிக்கல்வி (Computer Programme) ஆகியனவும் பாடசாலைகளில் போதிக்கப்படுகின்றன என்று குறிப்பிடப்பிட விரும்புகின்றேன்.

● **சரி, நிறைவாக பாடசாலைகளுக்கு தரிசிப்புகளுக்காகச் செல்லும் தாங்கள் பொதுவாக ஆசிரியர்களுககும், பெற்றோர்களுக்கும் இன்றைய பாடசாலைக் கற்பித்தல் முறைமை பற்றி என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

நல்லது இன்றைய பாடசாலைக் கற்றல, கற்பித்தல் முக்கியம் பெறும் கோட்பாட்டுக்கும், நடைமுறைக்கும் சில விலகல்கள் இருக்கத்தான் கின்ற செயலாண்மையை, வினைத் திறனை இம் மூன்று பக்கத்தில் இருந்தும் பெறமுடியாதுதான். இது ஒரு நோக்கு (Aspect).

மற்றது, பாடசாலையில் அலகு ரீதியாக நடத்தப்படும் கணிப்பீட்டுக் கருவிகள் மூலம் பெறப்பட்ட புள்ளிகளுக்கு ஒரு கனதி அல்லது பெறுமதி கொடுப்பது பற்றி எமது இலங்கைக் கல்வி மதிப்பீட்டுத் திணைக்களம் நடவடிக்கைகளைப் பூரணமாக மேற்கொள்ளாதிருப்பது ஆகும். குறிப்பாகச் சொல்வதானால், ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்று குறிப்பிடப்படும் கணிதம், மொழி ஆகிய பிரதான பாடங்களின் கணிப்பீட்டுப் புள்ளிகளை, உயர் வகுப்புப் பிரவேசத் தகைமைகளுக்கு கணக்கெடுக்காத, முக்கியம செலுத்தாத போக்கைக் குறிப்பிடலாம். அதாவது, வகுப்பறை மட்டத்தில் அலகுத் தேர்ச்சிக்கு மாணவன் ஈட்டிய புள்ளியை அடை

உலகிலுள்ள மேலைத்தேய நாடுகளில் இன்று கருத்தெடுக்கப்படுவது போல சேர்த்துக்கொள்ளும் நிலை இன்னமும் நம்நாட்டில் உருவாகவில்லை, ஆரம்பிக்கப் படவுமில்லை. இதனால், கணிப்பீட்டு முறைமைக்கு எம் சமூகத்தில் - பெற்றோர் மத்தியில் ஒரு அங்கீகாரம் இன்னமும் கிடைக்கவில்லை என்றால் மறுப்பதற்கில்லை. க.பொ.த. சாதாரண தர, உயர்தர மதிப்பீட்டுப் புள்ளியடைவுகளையே பெற்றுவருகின்ற எதிர்பார்க்கின்ற நிலை இன்னமும் நடை முறையில் இருக்கின்றது. இதுவொரு (Buckle) அங்கும் இங்கும் ஊசலாடும் நிலை எனலாம்.

பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பாகத் தம் பணிகளில் கண்ணும் கருத்துமாகப் பணியாற்றவேண்டும். புள்ளிகளைப் பதிவுசெய்துவிடவேண்டும் என்ற அலட்சியத்தில் அவற்றைப் பேணும் நிலை இருக்கிறதே ஒழிய அதன் நம்பகத்தன்மையில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. பாடசாலைகளில் பூரணப்படுத்தி ஒப்படைக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் ஆர்.டி சைபர் நான்கு (R.D.04) என்ற படிவத்தின் பூர்த்திகளின போது இவற்றை அவதானிக்க முடியும்.

சரியாகச் சொல்வதானால் பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் வினைத் திறன் மிக்க செயற்பாட்டிலும், அதன் நம்பகத் தன்மையிலும் தான் அதன் வெறறியே தங்கியிருக்கிறது. ஆகவே தான் Swot அடிப்படையில் ஆசிரியர்களினது வேலைத் திட்டங்கள் நம்பகத்தன்மையுள்ளதாக, பயனாளிகளான மாணவர்களின் நம்பிக்கைக்கு உரமூட்டுவனவாக அமைய வேண்டும் என்று முன்னரும் குறிப்பிட்டேன். அவை மாணவ மையக் கல்வியாக விஸ்தரிக்க வேண்டும் என்றேன்.

இவ்வாறு பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் நட்பகத்தன்மை மேம்



கனடா ரொறன்ரோ மாநகரில் உள்ள தமிழ்ப்பாடசாலை ஒன்றில் அங்கு பயிலும் சிறார்களுடன் ஆசிரியர் ஸ்ரீதயாளன் காணப்படுகிறார்.

# வழிகாட்டுவது ஆசிரியர் கடமை

பூரணமாக வழங்கப்படாமை

III சேவைத் தரங்கணிப்பில் முக்கியத்துவம் உணர்த்தப்படவில்லை.

IV செயற்பாட்டுக் குறைபாடுடைய சேவைகளை மேற்பார்வை செயயாமல், இதுதொடர்பில் இடர்பாடுகள்.

V தரங்கணிப்பின் மூலம் ஆசிரியர்கள் தட்டிக்கொடுக்கப்படலாம்.

VI ஒப்பந்த நியதிகள் குறித்து புரிந்துணர்வு பெறமுடியாமை

VII சேவைகளுக்குரிய கடமை உரிமைகள் பற்றிய வரைபுகள் பூரணமாகக் கொடுக்கப்படாமை

VIII நவீன கற்பித்தல் சாதனங்கள் பயன்படுத்தல் தொடர்பில் வளங்கள் பங்கிடாமை-இன்மை-அறிவு-போதாமை

ஆசிரியர் தரங்கணிப்பு என்பது ஒப்பந்தத்தின் பேரிலே இரு பகுதியினர் பங்குகொள்வதும் வகை கூறுவதும் இம் முறைமையும் கற்றல், கற்பித்தல் வினைத்திறனையும் எமது பிரதேசத்தின், நாட்டின் கல்வியடைவை மேம்படுத்தும் என்பது கூட நம் கல்விப்பூட்கையின் எடு கோளொன்றே

நிற்க-1) பேரளவிலான ஆசிரியர்?
2) மாற்றம் அடையும் ஆசிரியர்?
3) உன்னதமான ஆசிரியர்?

இம் மூவினரில் யாரை நம் யத்தை உருவாக்க மேற்கூறிய செயற்பாட்டுக்கு வேண்டி சூழலை ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கற்றல் நடவடிக்கைகளுக்கு வேண்டிய சூழலைப் பகுப்பாய்வு செய்து ஏற்ற பாடவிதான செயற்பாடுகளும், பாடத்திட்டங்களும், பாடப் போதனைகளும் இன்றைய பாடசாலைகளில் நடைபெற்று வருகின்றன. சூழலை இனங்கண்டு பகுப்பாய்வு செய்வதற்குத்தான் புதிய முகாமைத்துவ முறைமை ஒன்று தற்போது இருக்கிறது.

S - என்பது **Strength** - பலம்
W - என்பது **Weakness** - பலவீனம்
O - என்பது **Opportunities** - சந்தர்ப்பங்கள்
T - என்பது **Threats** - அச்சுறுத்தல்கள்

மேற்கூறிய ரீதியில் சூழலை Swot ஆய்வுமூலம் பகுப்பாய்வு செய்து காலத்திற்கேற்றதும், சூழ்நிலைக்கேற்றதுமான பாடத்திட்டங்களை வகுத்து பொருத்தமான கல்வியை வழங்குவதன் மூலம் இன்றைய ஆசிரியன் சிறந்த மாணவர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட எதிர்பார்க்கப்படுகின்றான். இதனால் தான இன்று முன்னைய போதனை முறை செய்கின்றன. பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக் கோட்பாடானது நான் முன்னர் குறிப்பிட்டது போல ஒரு கறறல், கற்பித்தல் - கணிப்பீடு பற்றிய ஒரு நிகழ்ச்சித் திட்டம். இம் மூன்றிலும் மாற்றம் கொண்டுவருவது தான் இத்திட்டத்தின் நோக்கமே.

வகுப்பறைகளில் 10 கணிப்பீடுகளை நடத்தி முடிப்பது மட்டும் தான் கணிப்பீட்டு முறைமையின் குறிக்கோள் என்று ஆசிரியர்கள் ஆகிய நம்மிற் பலர் நினைக்கின்றார்கள். இதனால், பாடசாலை மட்டக் கணிப்பீடு என்பதை கணிப்பீட்டுச் சோதனைகள் என்றும் கருதுகிறார்கள். மதிப்பீடு, கணிப்பீட்டுக் கலாசாரமாக மாறியதுடன் கற்றலும், கற்பித்தலும் ஒரு புதிய வினைத்திறனையே இத்திட்டம் எதிர்பார்க்கின்றது.

பொதுவாகப் பாடசாலைகளின் கோட்பாட்டுக்கும் நடைமுறைகளுக்கும் இடைவெளி இல்லாதிருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். இது அதிபருடையதும், ஆசிரியர்களுடையதுமான பெரிய பொறுப்பாகும். கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் விலகல் இருக்குமானால் இத்திட்டம் வெற்றிகரமாக நடைபெறுகிறது என்று சொல்லமுடியாது. எதிர்பார்க்கவுப் பரீட்சைக்கு (Achcheivement Test) சேர்ப்பதில்லை. இறுதிப் பெறுபேற்றில் சேர்ப்பதில்லை. இதனால் ஆசிரியர்களிடத்தில் ஏதோவொரு தொய்வு காணப்படுகின்றது. இப் பாடங்களில் கணிப்பீடுகள், என்ன நம்பக மற்றவையா? இதற்கும் அப்பால்; பாடசாலைகளின் கணிப்பீட்டுப் புள்ளிகள் பற்றி எவ்வளவு முக்கியமாகப் பேசினாலும், மேற்கொண்ட வேலைவாய்ப்பு, தொழில் முயற்சிகளுககான கல்வித் தகைமைத் தேவைகளுக்கு இது வரையும், மாணவரின் கணிப்பீட்டுத் திட்ட அறிக்கைகளை விசாரித்துப் பார்க்கின்ற நிலை இதுவரையும் உருவாகவில்லை! அதாவது தேசிய மட்டத்தில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் பெறுமதியான்து படுத்தும் போதுதான் தேசியமட்டப் பரீட்சைகளில் தேவையானது முற்றாக இல்லாதுபோகும் - தேவையற்றதாக வரும். இக் கட்டத்தில் எமது நிகழ்ச்சித் திட்டத்தின் **Weightage** - பெறுமானம் அல்லது கனதியானது மேலோங்கும்.

0-2, 0-3; 0-4 **R.D** ஆகிய படிவங்களைத் திருப்திகரமாக ஆவணப்படுத்தலும், முன்னேற்றமடைய வேண்டிய நிலையில் உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக ஆசிரியர்கள் நேரான - மனப்பாங்கு (Positive Attitude)டன் தம்பணியை ஆற்றுவது முக்கியம். அவ்வாறாயின் இத்திட்டத்தின் பயனும் நவீன பாடசாலைக் கல்வியின் வெற்றியும் முயற் கொம்பல்ல (முற்றும்)

## சுகாதார ஊழியர்பதவி உயர்வை இரத்துச்செய்யக் கோரிக்கை

(கொழும்பு)

சுகாதார ஊழியர் வேலைநிறுத்தப் போராட்டத்தின் போது வழங்கப்பட்ட பதவியுயர்வுகளை உடனடியாக இரத்துச் செய்யுமாறு சுகாதார சேவை தொழிற்சங்க கூட்டமைப்பு சுகாதாரத்துறை அமைச்சர் பி.தயாரட்ணவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த மாதம் 17ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது இந்நியமனங்கள் வழங்கப்பட்டன.

இது தொடர்பாக அமைச்சரவை உபகுழுவுக்கும், தொழிற் சங்கக் கூட்டமைப்புக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்படும் என உறுதி வழங்கப்பட்டதை அடுத்தே கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

எனினும், இது தொடர்பாக இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், இவ்விடயத்தை காரணமாகக் கொண்டு மீண்டும் ஒருதடவை தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட நேரிடும் என சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

(தி-61)

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்
– குறள்

வலம்புரி

## வேலைநிறுத்த போராட்டங்கள்

ஐக்கியதேசிய முன்னணி அரசு இப்போது இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளபட்டுள்ளது. சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய பாரிய பொறுப்புகளுக்கு அப்பால் கிழமைக்குக் கிழமை தொழிற் சங்கங்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தப் போராட்டங்கள் என்பவற்றிற்கு முகங்கொடுக்க வேண்டிய தேவைப்பாடும் உண்டு. சமாதான முயற்சிகளை அரசு முன்னெடுத்துள்ள போதிலும், அது நிரந்தரமானதோர் தீர்வை அரசு எட்டத் தவறியதனால், நாடு குழப்பமுற்ற நிலையில் தத்தளிக்கிறது.

பொருளாதார வளர்ச்சியின்மை, பணவீக்கம், பொருட்களின் விலையேற்றம் இவற்றின் வழியாக ஏற்பட்ட வாழ்க்கைச் செலவு இவை காரணமாக மக்கள் தமது ஜீவனோபாயத்தைக் கூட செம்மையாக நகர்த்த முடியாமல் உள்ளது.

இதன் காரணமாக தொழிற் சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டங்களில் குதித்துள்ளன. பொதுவாக பணவீக்கம் நிலவுகின்ற போது நிரந்தர வருமானத்தை உழைக்கின்ற அரச ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது எதிர்பார்க்கப்பட்ட ஓர் நிகழ்வாயினும் இத்தகைய தொழிற்சங்கப் போராட்டங்கள் அரசின் ஆட்சியைக் கூட கவிழ்த்து விடும்

எனவே தொழிற்சங்கங்கள் பரவலாக முன்னெடுத்து வரும் வேலை நிறுத்தப் போராட்டங்களை அரசு தகுந்த முறையில் முடிவுக்கு கொண்டுவரத் தவறுமாயின் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும்.

குறிப்பாக இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி அரசு செல்கின்ற போது, அதற்கு எதிரான இனவாத சக்திகள் தொழிற் சங்கங்களின் போராட்டங்களைத் தமக்கு சாதகமாக்கிக் கொள்ளும் அத்தகையதோர் சூழ்நிலை உச்சம் பெறுமாக இருந்தால் அரசின் சமாதான முயற்சிகளும் தளம்பல் அடைவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

சமகாலத்தில் தொழிற் சங்கங்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டங்களுக்கு அரசியல் பின்னணிகள் இருப்பதாக அரசு கூறிக்கொண்டாலும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவியேற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியாக இன்னும் சில மாதங்களே இருக்கின்ற போதிலும், அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வோ அன்றி வேலை வாய்ப்புகளோ எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்நிலையில் நாடு அபிவிருத்தியை நோக்கி முன்னேறுகிறதென்ற செய்திகள் எல்லாம் வெறும் வார்த்தை ஜாலங்களாக இருக்குமே தவிர, அஃது ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக்கு உதவப் போவதில்லை.

எனவே அரசு தனது சமாதான முயற்சியோடு சம்பள உயர்வு, வேலைவாய்ப்பு என்பவற்றையும் வழங்கி வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம் போன்றவற்றை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

# சிறுபான்மை ஆதரவின்றி ஆட்சி அமைக்கவே அரசு தேர்தல் முறையை மறுசீரமைக்கிறது

## விநாயகமூர்த்தி எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறுபான்மை இனக்கட்சிகளின் ஆதரவு இன்றி ஆட்சி அமைப்பதற்காகவே தேர்தல்முறை மறுசீரமைக்கப்படுவதாக அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தேர்தல்முறை மறுசீரமைக்கப்படுவது தொடாபாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தேர்தல்முறை மறுசீரமைக்கப்படுவதன் மூலம், வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் வாழும் சிறுபான்மை இனத்தவரின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் அற்றுப்போகும் நிலை ஏற்படும்.

தேர்தல் மறுசீரமைப்பின் மூலம் சிறுபான்மை இனஅரசியல கட்சிகளுக்கோ சிறுபான்மை இன்மக்களுக்கோ எதுவித பாதிப்பும் ஏற்படாது என தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பாக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவிக்குழுவின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ள போதிலும்,

தற்போதைய தேர்தல் முறையை மறு சீரமைப்பு செய்வதற்காகவே அரசாங்கத்தால் இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் சிறுபான்மை இனக் கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பதனால் அவர்கள் இது தொடர்பான தங்கள் கருத்துக்களை வெளியிடமுடியும்.

சிறுபான்மை இனக் கட்சிகளின் ஆலோசனை பெறப்பட்ட பின்னர் இந்தத் தேர்தல் திருத்தச் சட்டமூல யோசனைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி-61)

## சுயதொழில் சுழற்சிமுறைக் கடன்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கஸ்தூரியார் வீதியில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் சமூக அபிவிருத்தி மன்றம் யாழ்.மாவட்டத்திலுள்ள 7 பிரதேச செயலர் பிரிவுகளூடாக மகளிருக்கான சுயதொழிலுக்கான சுழற்சி முறைக் கடன் திட்டமொன்றினை அமுல்படுத்தியுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் இற்றை வரை சுமார் 500பேர் பயனடைந்துள்ளனர்.

3ஆயிரம் முதல் 30ஆயிரம் ரூபா வரையிலான இச் சுயதொழிலுக்கான சுழற்சிமுறை கடன் திட்டமானது 52சமூக அபிவிருத்திக் கழகங்களின் ஊடாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மகளிர் தலைமைத்துவம் மற்றும் தொழிற் பயிற்சிகளையும் இம் மன்றம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-16)

## குருநகர், பாசையூர் பகுதிகளில்

# வீடுவீடாகச் செல்லும் படையினர் குடும்ப அட்டைகளைப் பரிசீலனை

(திருநெல்வேலி)

புறநகர்ப் பகுதிகளான குருநகர், பாசையூர் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குச் செல்லும் படையினர் அங்கு குடும்பப்பதிவு அட்டைகளை பரிசோதித்து வருவதாகக் கூறப்படுகிறது.

நேற்றும் நேற்று முன்தினமும் படையினர் மேற்படி பகுதியில் வீடு வீடாகச் சென்று இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் குடும்பப் பதிவு அட்டையில் அடங்காத எவரையும் வீடுகளில் வைத்திருக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன் அண்மையில் இப் பகுதியில் இடம்பெற்ற படையினர் மற்றும் பொலிஸாரிற்கென மக்கள் போராட்டங்களில் இவ்வாறானவர்களே ஈடுபட்டதாகவும் இனிமேல் இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றால் நீங்களே பொறுப்பு என அப் பகுதி மக்களை எச்சரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, யாழ்.மடம் சந்திப் பகுதியில் கடந்த வெளளியன்று மாலை இடம்பெற்ற இராணுவ ட்ரக், மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் பலியானதும் அதனைத் தொடர்ந்து இப் பகுதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரணே இவ் விபத்துக்குக் காரணமெனக் கூறி அதனை அகற்றக் கோரி பொது மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியதும் தெரிந்ததே.

(உ-43)

# பிரிட்டனில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 'தமிழ்ப் புலிகள்'

(கொழும்பு)

பிரிட்டனில் பிரபலம் மிக்கவரான ஜமி ஒலிவர் என்பவர் தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற வேளை ''தமிழ்ப்புலிகள்'' எனப் பொறிக்கப்பட்ட ரீசேட்டை அணிந்திருந்தமையானது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டனில் விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் தடைசெய்யபபட்ட அமைபபின் சின்னங்களைக் காட்சிக்கு வைப்பதோ அல்லது முதன்மைப் படுத்தி வெளியிடுவதோ பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்படும்.

இந்த நிலையில் பிரஸ்தாப நபர் தமிழ்ப் புலிகள் எனப் பொறிக்கப்பட்ட ரீசேட்டுடன் நிகழ்ச்சியில் கலந்துகொண்டமையினால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மேற்படி ரீசேட்டை தான் அமெரிகாவில் இருந்து கொள்வனவு செய்ததாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஒலிவர் மேற்படி ரீசேட்டை அணிந்து கொண்டமை தொடர்பாக இலங்கை செய்தியாளர் நெவில் டி.சில்வா மின் அஞ்சல் மூலம் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டிருப்பது பற்றித் தான் அறிந்திருக்கவில்லை என ஒலிவர் கூறியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(த)

## மீளக்குடியமர்ந்த மக்கள் ஊரகப் புனர்வாழ்வுக் குழுவில் புகார்

(கிளிநொச்சி)

கடந்தகால யுத்த நடவடிக்கைகளின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியேறியுள்ள 17ஆயிரத்து 749 குடும்பங்கள் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு பெறத் தெரிவு செயயப்பட்டிருந்த போதிலும் 7ஆயிரத்து 639 குடும்பங்களுக்கு இதுவரை எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லையென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக குடியமர்வுக் கொடுப்பனவுகள் பெற 17ஆயிரத்து 749 குடும்பங்கள் இனங காணப்பட்டுள்ளன.

அவர்களில் இதுவரை 10ஆயிரத்து 170 குடும்பங்களுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய 7ஆயிரத்து 639 குடும்பங்களுக்கு இதுவரை எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கொடுப்பனவுகளை இதுவரை பெற்றுக்கொள்ளாத குடும்பங்கள் கிளிநொச்சி ஊரகப் புனர்வாழ்வுக்குழு மற்றும் தத்தமது கிராம அலுவலர்கள் ஆகியோரிடம் இதுபற்றி முறையிட்டுள்ளனர்.

எனினும் இவர்களுக்கு வழங்குவதற்குரிய நிதி இன்னமும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்குக் கிடைக்கவில்லை என கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

(உ-43)

## ஸ்கிறிப்நெற் ஏற்பாட்டில் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்கிறிப் நெற் நிறுவனம் யாழ்.பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகுடன் இணைந்து நடாத்தும் திரைப்படத் தயாரிப்பாளர்,இயக்குநர்களுக்கான பயிற் சிப்பட்டறை நேற்றுக் காலை 9மணியளவில் யாழ்.வைத்தியசாலை வீதியில உள்ள ஓ.எல்.ஆர். ஆலயம் முன்பாகவுள்ள அதன் தொடா்பகத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஸ்கிறிப் நெற்றின் யாழ்.உதவித் திட்ட இணைப்பாளர் தை.கண்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொணடார். திருமதி மனோன்மணி சண்முகதாஸ் சிறப்பு விருந்தினராகப் பங்குகொண்டார்.

மற்றும் பிரிட்டனின் திரைப்பட இயக்குநரும் எழுத்தாளருமான நோயெல்லா ஸ்மித், சிங்களத் திரைப்பட பெண் தயாரிப்பாளரான இலந்தி ஆகியோர் வள ஆளணியினராகப் பங்கேற்றனர்.

இதேவேளை, மேற்படி பயிற்சிப் பட்டறையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அதாவது 18பேரை மாத்திரமே இணைத்துக் கொள்வதெனத் தாம் திட்டமிட்டிருந்த போதிலும், யாழ்.மாவட்டத்திலுள்ள பலர் இதில் பங்கேற்க ஆர்வம் காட்டியதை அடுத்து இந்த எண்ணிக்கையை 30ஆக உயர்த்தியிப்பதாக ஸ்கிறிப் நெற் யாழ்.திட்ட இணைப்பாளர் கா.ஞானதாஸ் எம்மிடம் தெரிவித்தார்.

இப் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 17ஆம் திகதி வரையான 12 தினங்கள் இடம்பெறவிருப்பது குறிப்பிடத் தக்கது.

(உ)

ௐ

## தினசரி தியானம்

### அருளும் ஒளியும்

உங்கள் உள்ளம் இறைவனுடைய கோயிலாகும். இறைவனை அங்கே பிரதிஷ்டை செய்ய விரும்பினால் இக் கோயிலைத் தூய்மையாக வைத்திருங்கள் கடவுளிடம், உண்மையாகத் தூய்மையாக முழுமையாக மயக்கம் இல்லாமல் நிபந்தனையில்லாமல், கபடில்லாமல் சரணம் அடையுங்கள். அப்போதுதான் இறைவனுடைய அருளும் ஒளியும் கீழிறங்கிவரும்.

சுவாமி சிவானந்தர்

# ப.நோ.கூ.ச. பணியாளர்கள் புலனாய்வுப் பிரிவினால் கைது

(திருநெல்வேலி)

524பிரிகேட் பிரிவுக்குள் அமைந்துள்ள வடமராட்சி ப.நோ.கூ.சங்கப் பணிமனைக்கு வேலை நிமித்தம் சென்ற அதன் பணியாளர்கள் இருவர் நேற்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அல்வாயைச் சேர்ந்த கன்னையா செல்வராசா (வயது20) தும்பளையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிரபாகரன் (வயது45) ஆகிய இருவருமே நேற்றுக்காலை 8 மணியளவில் பணிக்குச் சென்ற வேளை கைது செய்யப்பட் டுள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணை செய்துவரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், மேற்படி இருவரும் ''நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்'' என்கின்ற விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் வெளியீட்டை வைத்திருந்தமைக் காகவே கைது செய்யப்பட்டதாகத் தெரிவிததுள்ளனர். (உ-43)

## சமாதான...

களால் கையாளப்பட்டு வருகின்றன.

இதனால் சிறு சம்பவங்கள் கூட பூதாகரமாக மாறும் நிலைமைகள் தோன்றி விடுகின்றன.

இந்த நிலைமைகளைக் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வருவதற்கு இராணுவம் -விடுதலைப் புலிகளுக்கிடையிலான சந்திப்புக்கள் வாராவாரம் இடம்பெறுவது நல்ல விளைவுகளைத் தரும் என்று கூறினார்.

இச் சந்திப்பில் மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ், அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த)

## அரசதுறை...

முன்னணி என்பனவும் கூட்டாக கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக இப் போராட்டத்தை நடத்தவுள்ளன. எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது.

மேலும் தமது கோரிக்கைகள் பற்றி கவனத்தில் எடுக்குமாறு அரசாங்கத்தைக் கோரி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21ம் திகதி சகல அரசசேவை ஊழியர்களும் அடையாள வேலை நிறுத்தத்தை நாடளாவிய ரீதியில் நடாத்தவிருப்பதாக அவர் தெரிவித்தார். (த)

## சித்திர ஆசிரியர் பயிலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய்க் கோட்டங்களைச் சேர்ந்த சித்திரப் பாட ஆசிரியர் களுக்கான பயிலமர்வு எதிர்வரும் 10ம், 11ம் திகதிகளில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30மணி வரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் நிலை யத்தில் நடைபெறவுள்ளது. (ந-5)

## மன்னாரில்...

வவுனியாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வுக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு செல்லப்பட்ட பொங்கு தமிழ்ப் பானையே மன்னாருக்கு கொண்டு செல்லப்படுகிறது.

இதேவேளை மன்னாரில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுக்காக மன்னார் நகர்ப் பகுதி எங்கும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது.

பல்கலைக் கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடு தவிர்ந்த நேரங்களில் மக்களை எழுச் சிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

நானாட்டான், வங்காலை ஆகிய பிரதேசங்களில் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித் துள்ளதாக மன்னார் மாவட்ட பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுத்தலைவர் றீகன் தெரிவித் துள்ளார். (ந்-5)

## புலிகள்-முஸ்லிம்கள் திருமலையில் சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச் சந்திப்பில் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் திலக், மாவட்ட பொருண் மியப் பொறுப்பாளர் தர்மன் ஆகியோரும் முஸ்லிம்கள் சார்பில் கிண்ணியா உலமாசபையின் செயலாளர் அப்துல் சலாம் உட்பட பத்துப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதில் திருமலை குரங்குபாஞ்சான் பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம் அமைந்துள்ள இடத்திற்கு 50மீற்றருக்கு அப்பால் விவசாயம் செய்வதற்கு இணக்கம் காணப் பட்டது. (த)

## சமுர்த்தி அமைச்சருடன் இன்று சந்திப்பு

(தொல்புரம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்தி மன்றத் தலைவர் எஸ்.ஸ்ரீகரன் தலைமையிலான குழுவினர் இன்று சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திசநாயக் காவை அவரது இல்லத்தில் வைத்து சந்திக்கவுள்ளனர்.

இச் சந்திப்பின்போது யாழ். மாவட்ட சமுர்த்தித் திட்ட நடவ டிக்கைகள் குறித்து கலந்துரையாட உள்ளதுடன் தமது கோரிக்கைகளை அறிக்கையாகவும் சமர்ப்பிக்க வுள்ளனர்.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி மன்ற நிர்வாகத் தலைவர்கள், செயலாளர்கள் அமைச்சரைச் சந்திக்க கொழும்பு சென்றுள்ளனர். (த-70)

## இஸ்ரேலின்...

எனவும் அமெரிக்காவிடம் இருந்து கொள்ளவனவு செய்வதிலும் பார்க்க இஸ்ரேலிடம் இருந்து கொள்வனவு செய்யும் போது 4.4மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலாபமாக கிடைக்கும் எனவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித் துள்ளன. (ம)

# நெடுந்தீவு பஸ்சேவை முற்றாக ஸ்தம்பிதம்

## பயணிகள் பெரும் சிரமம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வந்த வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் சேவைகள் முற்றாகத் தடைப்பட்டுள்ளன.

பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வந்த ஒரேஒரு பஸ்ஸும் பழுதடைந்துள்ளதால் கடந்த 4ம் திகதி முதல் போக்குவரத்து சேவை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

ஏற்கனவே சேவையில் ஈடுபட்டு வந்த பயணிகள் பஸ் பழுதடைந் ததைத் தொடர்ந்தே புதிய பஸ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. புதிய பஸ்ஸும் தற்போது பழுதடைந்துள்ளமையால் பயணிகள் பெரும் அசௌகரி யங்களை எதிர் நோக்குகின்றனர். (த-48)

## பாராட்டு வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவின் நீண்ட கால உறுப்பினர்களாக இருந்த ஓய்வு பெற்ற பிரதம சுகாதாரப் பரிசோதகர் பொ.சிவப்பிரகாசம் மற்றும் இடமாற்றம் பெற்ற இ.தயாபரன் ஆகியோரைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும். (ந)

## வோட் பிளேஸுக்கு ஜே.ஆரின் பெயர்

(கொழும்பு)

கொழும்பு 7ல் அமைந்துள்ள வோட் பிளேஸ் என்னும் இடத்திற்கு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் பெயரை சூட்டுவதென கொழும்பு மாநகரசபை முடிவு செய்துள்ளது.

இன்று நடைபெறவுள்ள மாநகரசபைக் கூட்டத்தில் வைத்து கொழும்பு மேயர் பிரசன்ன குணவர்த்தன இப் புதியபெயரை சூட்டவுள்ளார்.

இதன்படி மேற்படி இடம் ஜே.ஆர்.ஜெயவர்த்தன மாவத்தை என பெயர் மாற்றம் செய்யப்படும். (ந)

## முதியோர்தின விழா

(காரைநகர்)

காரைநகர் மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தின் முதியோர் தினவிழா இன்று பிற்பகல் 2.30மணிக்கு சிவகாமி அம்பாள் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

காரை மத்தி கிராம சேவையாளர் க.சிவலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலும் சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக விடுதலைப் புலிகளின் காரைநகர் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.சுடரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-246)


உங்கள் வலம்புரியின் வாரமலர்




சங்குநாதம்

❊இடைக்கால வரைபு இறுதி வடிவம் பெறுகிறது.

❊இராணுவ வாகனம் மோதி இளைஞர்கள் இருவர் பலி

❊புலிகள் மீது மீண்டும் தடை அமெரிக்காவின் சதி அம்பலம்

❊வியாசரின் பதில்கள்.

❊பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை றூபா 14.00

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

சங்கு நாதம்

(06-12 ஒக். 2003) Sankunatham